# பழைய ஏற்பாடு ஆய்வு (பாடம்-4)

**யாத்திராகமம் தொடர்ச்சி...**

யாத்திராகமம் புத்தகத்தின் பிரதானமான இரண்டு பிரிவுகள்:-

- தேவனுடைய பராக்கிரம செயலால் இஸ்ரவேல் புத்திரர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுதல்
- சீனாய் மலையில் தேவன் ஜனங்களோடு ஏற்படுத்திய நித்திய உடன்படிக்கை

சீனாய் மலையில் தேவன் ஜனங்களோடு ஏற்படுத்திய நித்திய உடன்படிக்கை (யாத் 19:1 – 40:38)

- சீனாய் மலையில் அருகில் ஜனங்கள் பாளையமிறங்கி, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஜனங்கள் காத்திருக்கும்படி தேவன் சித்தம் கொண்டார்.
- சீனாய் மலையில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை ஒரு பெரிய தேசமாக உருவாக்குகிறார்.
- "சீனாய் மலை உடன்படிக்கை" என்று அழைக்கப்படுகிற நிலையில் ஒரு அருமையான உடன்படிக்கையை தேவன் ஜனங்களோடு இவ்விடத்தில் ஏற்படுத்துகிறார்.

1.உடன்படிக்கை

உடன்படிக்கை என்பது உறவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு அம்சம். உறவுகளுக்கிடையே இருக்கிற தன்மையை அன்பை, ஐக்கியத்தை அதிகரிக்க செய்வதே இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும்.

தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களையும் இந்த உடன்படிக்கை மூலமாக உறுதி செய்கிறார் என்று நாம் பொருள் கொள்ளலாம்.

- தேவன் தம்முடைய ஜனங்களோடு ஒரு விசேஷித்த உறவை ஏற்படுத்தவே விருப்பமுடையவராயிருக்கிறார்.

தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு இந்த உடன்படிக்கையின் மூலமாக ஏற்படுத்தின உறவின் முக்கியத்துவத்தை மூன்று வாக்கியங்களாக கூறலாம்.

1. பூமியெங்குமுள்ள ஜனங்களெல்லாரிலும் இஸ்ரவேலரை எனக்கு விசேஷமானவர்கள் என்பதை வெளிப்படுத்துவதற்காக தேவன் இஸ்ரவேல் மக்களோடு தமது உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

2. இஸ்ரவேலர் ஆசாரிய ராஜ்யமாக ஆசீர்வதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதினால் தேவன் இஸ்ரவேல் மக்களோடு தமது உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.
3. இஸ்ரவேலர் “தேவனுக்கு பரிசுத்த ஜனம்” என்பதினாலும் தேவன் தன்னுடைய உடன்படிக்கையை இஸ்ரவேலரோடு செய்து கொண்டார்.

யாத் 5:8ல் நாம் பார்க்கின்ற படி இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய உடன்படிக்கை ஏற்றுக்கொண்டார்கள், உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடப்போம் என்றும் உறுதியளித்தார்கள்.

2.பத்துக்கட்டளைகள்

- ❖ உடன்படிக்கையின் நிபந்தனைகளாக தேவன் ஜனங்களுக்கு கொடுத்ததே இந்த பத்து கட்டளைகள் (இதை எழுத்தின் படியே பத்து வார்த்தைகள் என்றும் நாம் கூறலாம்)
- ❖ தங்களோடு தேவன் ஏற்படுத்தியிருக்கிற உடன்படிக்கைக்கு ஜனங்கள் மறுமொழியாக கூறப்படவேண்டிய (செய்யப்பட வேண்டிய) பிரதிவார்த்தைகளாக இந்த பத்துகட்டளைகள் அமைந்திருக்கிறது என்றும் கூறலாம்.

பரிசுத்த வாழ்வின் பிரமாணத்தில் இந்த பத்துக்கட்டளைகளும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. மட்டுமல்லாது இந்த பத்து கட்டளைகள் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் முகவுரையாக இருக்கின்றது.

யாத்திராகமத்தின் மற்ற அதிகாரங்களிலும், இந்த புத்தகத்தை தொடர்ந்து வருகிற லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய புத்தகங்களிலும் இந்த பத்து கட்டளைகள் அதிகமாக விளக்கி கூறப்பட்டுள்ளன.

பத்து கட்டளைகளில் விளக்கப்பட்டிருக்கிற முக்கிய தலைப்புகள் - அந்நிய தேவர்கள், விக்கிரகங்கள், கர்த்தருடைய நாமம், ஒய்வு நாள், பெற்றோர் குறித்ததான காரியங்கள், கொலை, விபச்சாரம், களவு, பொய்சாட்சி, இச்சை. சட்டங்கள், குடியுரிமை, ஆராதனை மற்றும் ஒழுங்கநெறிகள் ஆகிய இவைகளை ஜனங்களுக்கு கற்றுக்கொடுப்பதே இந்த பத்து கட்டளைகளின் பிரதானமான நோக்கமாகும்.

- ✓ மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்குரிய நிழலட்டமான காரியங்களையும் நாம் பத்து கட்டளைகளில் காணமுடியும்.
- ✓ ஒரு குறிப்பிட்ட ஜனக்கூட்டத்தை வழிநடத்துவதற்காக கொடுக்கப்பட்ட குடியுரிமை சட்டங்கள் தான் இந்த பத்துக்கட்டளைகள் என்று சொன்னாலும் அது மிகையாகாது.

- ✓ ஒழுக்கநெறி சம்பந்தப்பட்ட பிரமாணங்களும், விளக்கங்களும், விரிவாக்கங்களும் ஜனங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட தேவனுடைய ஆலோசனைகள் நிறைந்த தொகுப்புகள் தான் இந்த பத்து கட்டளைகள் என்றும் கூறலாம்.

(கானானிய மற்றும் எகிப்திய கலாச்சாரத்துடன் ஒத்துப்போகாத முற்றிலும் வேறுபட்ட ஜீவியம் செய்வதற்கு தேவன் கொடுத்ததே இந்த பத்து கட்டளைகள்)

3. ஆசாரிப்புக்கூடாரம்

- ➢ ஆசாரிப்புக்கூடாரம் சீத்தீம் மரத்தினாலும் திரைகளாலும் உண்டாக்கப்பட்டது.
- ➢ தேவ பிரசன்னம் ஜனங்களோடு இருப்பதற்காகவும், தானே ஜனங்களுடைய தேவன் என்று அடையாளப்படுத்துவதற்காகவும் இந்த ஆசாரிப்பு கூடாரம் உண்டாக்கப்பட்டது.
- ➢ கிருபையின் வெளிப்படையான அடையாளமாகவே இந்த ஆசாரிப்புக்கூடாரம் இருக்கிறது.
- ➢ தேவனைக்காணவும், தேவ பிரசன்னத்தை அனுபவிக்கவும், தாங்கள் செய்த பாவங்களுக்கும் அக்கிரமங்கள்ககும் பலி செலுத்தவும் ஜனங்கள் இந்த ஆசாரிப்புக்கூடாரத்துக்கு வந்தனர்.
- ➢ தேவன் மோசேக்கு காண்பித்த மாதிரியின்படியேயும், தேவனுடைய சட்டதிட்டங்களின் படியேயும் இந்த ஆசாரிப்புக்கூடாரம் நிறுவப்பட்டது.

ஆசாரிப்புக் கூடாரத்தின் அமைப்பு

1. பிரகாரம்
   - ➢ வெண்கல தூண்களாலும், வெள்ளிக் கொக்கிகளால் இணைக்கப்பட்ட இரண்டு மெல்லிய துணிகளாலும் (திரைகளாலும்) ஆனது.
   - ➢ நுழைவு பகுதி கிழக்குதிசையில் அமைந்திருக்கும்.
   - ➢ பிரகாரத்தின் முதல் கிழக்கு பகுதி ஆராதிக்க வருகிறவர்களின் பகுதியாக இருந்தது.
   - ➢ பிரகாரத்தின் இரண்டாவது பகுதியில் வெண்கல பலிபீடம் உள்ளது. இதனை தொடர்ந்து வெண்கலத் தொட்டி அமைக்கப்பட்டிருந்தது.
2. பரிசுத்த ஸ்தலம்
   - ➢ தெற்கு பகுதியில் பொன்னினால் செய்யப்பட்ட விளக்குத்தண்டுகள் இருந்தது.
   - ➢ வடக்கு பகுதியில் தேவ சமூகத்து அப்பங்கள் வைக்கப்படுகிற மேஜை இருந்தது.
3. மகா பரிசுத்த ஸ்தலம்
   - ➢ நுழைவு பகுதியில் தூபகலசம் இருக்கிறது

- உட்புறத்தில் உடன்படிக்கை பெட்டி இருந்தது.
  - ✓ உடன்படிக்கை பெட்டி சீத்தீம்மரத்தினால் செய்யப்பட்டு பசும்பொன் தகட்டினால் மூடப்பட்டிருந்தது.
  - ✓ உடன்படிக்கை பெட்டியின் மேல் இரண்டு பக்கங்களிலும் தூய பொன்னினால் செய்யப்பட்ட இரண்டு கேரூபீன்கள் தங்கள் செட்டைகளால் உடன்படிக்கைபெட்டியின் மேல்பக்கத்தை மூடியிருந்தது.

கிருபாசனம் வைக்கிற பெட்டியின் மேல் தேவபிரசன்னம் கடந்து வருகிறது. ஆசாரியர்கள் தேவ சத்தத்தைக் கேட்கிற இடமும் இதுதான். தேவனுடைய மகிமையின் பிரசன்னம் வெளிப்படுகிற இடமும் இதுதான்.

உடன்படிக்கை பெட்டிக்குள் ஆரோனின் துளிர்த்த கோல், மன்னா வைக்கப்பட்டிருந்த பொற் பாத்திரம், பத்து கட்டளைகள் ஆகியவைகள் இருந்தன.

வருஷத்திற்கு ஒருமுறை பாவநிவிர்த்தி செய்யப்படுகிற நாள் என்கிற நாளில் பிரதான ஆசாரியன் இங்கு வந்து தனக்காகவும், ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்து தேவனிடம் பரிந்து பேசுவார்.

## லேவியாகமம்

யாத்திராகமம் புத்தகத்தின் தொடர்ச்சியே லேவியாகமம் ஆகும்.

“தேவ ஜனங்கள் பரிசுத்த வாழ்க்கை வாழ வழிநடத்தக்கூடிய வழிநடத்துகிற புத்தகம்” என்று இப்புத்தகத்தை கூறலாம்

ஆசாரிப்புக் கூடாரத்துக்குள் தேவன் வருவதோடு யாத்திராகமம் முற்று பெறுகிறது. ஆனால் ஆசாரிப்பு கூடாரத்திலிருந்து தேவன் பேசுவதின் கிருபையில் லேவியராகமம் துவங்குகிறது.

புத்தகத்தின் கருப்பொருள்

எவ்விதம் தேவசமூகத்தில் வருவது மற்றும் தேவனுடைய பிரசன்னத்தின் உதவியால் எவ்வாறு தேவனை பிரியப்படுத்துகிற வாழ்க்கை வாழ்வது என்பதையும் விளக்கி காட்டுவதாக உள்ளது என்று வேத வல்லுநர்கள் கூறுகின்றன.

“பரிசுத்தமுள்ளவர்களாயிருங்கள்” என்பது தான் இப்புத்தகத்தின் திறவுகோல் வார்த்தையாகும். (19:2, 15:31, 19:18)

## புத்தகத்தின் இரண்டு பெரும் பிரிவுகள்

1. பலிகள், ஆராதனை, ஆசாரியர்கள் - (1-16)

2. அனுதின வாழ்க்கையின் காரியங்கள் (11-27)

ஆசாரியர்கள்

- ✓ மோசே ஆசாரிய ஊழிய அழைப்பை கொடுக்கும் முன்னர் தன் குடும்பத்திற்காக பலி செலுத்துகிற பழக்கமுடையவனாய் இருந்தான் என்பதற்கு ஆதாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- ✓ இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு வெளியே வந்தபிறகு ஆசாரியத்துவ ஊழியம் என்பது அவர்களுடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இந்த ஆசாரியத்துவ ஊழியத்தினால் ஜனங்களுடைய வாழ்க்கையில் பெரிய ஆசீர்வாதங்களும் மாற்றங்களும் உண்டாயிற்று.
- ✓ ஆரோன் பிரதான ஆசாரியனாக அபிஷேகம் பண்ணப்பட்டு ஆசாரியத்துவ ஊழியத்திற்கு ஏற்படுத்தப்பட்ட பிற்பாடு ஜனங்களுடைய வாழ்க்கையில் செயல்திறன்மிக்க ஒழுங்குப்படுத்த ஆராதனை முறைகள் உண்டாயின. ஆரோனைத் தொடர்ந்து அவனது குமாரர்களாகிய நாதாப், அபியூ, எலெயாசர் மற்றும் இத்தாமர் ஆகியோர் தங்கள் தகப்பன் செய்த ஊழியத்தில் உதவி செய்யக்கூடியவர்களாக இருந்தனர்.
- ✓ மோசே தேவனுடைய வழிநடத்துதலின்படி ஆசாரியர்களுக்கு முக்கியமான ஊழிய பொறுப்புகளையும் கொடுத்தார், ஆசாரியர்களுக்கு உதவி செய்யும்படி லேவியர்களையும் நியமித்தார்.
- ✓ ஆசாரிய ஊழியம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த "மத்தியஸ்தன்" என்கிற ஊழிய பொறுப்பு உடையதாக இருக்கிறது. இது தேவனுக்கும் மனிதனுக்கும் நடுவில் மத்தியஸ்தனாக நின்று செயல்படுகிற ஊழியம். பலிகளை செலுத்தி பாவநிவர்த்தி செய்கிறதும் இந்த ஊழியத்தின் பங்காகவே இருந்தது.

ஆசாரியர்கள் மோசேயின் பிரமாணத்திற்கு பாதுகாவலர்களாக, ஜனங்களுக்கு அவைகளை போதிக்கிறவர்களாக காணப்பட்டனர்.

ஆசாரிப்பு கூடார ஊழியங்களில் காணப்படுகிற அனைத்து ஊழியங்களிலும் பின்பு உண்டான ஆலய பணிகளிலும் இந்த ஆசாரியர்கள் மிகுந்த பொறுப்புடையவர்களாக இருந்தனர்.

பலிகளும் காணிக்கைகளும்

இஸ்ரவேல் ஜனங்களுடைய ஆராதனையில் 5 விதமான பலிகள் காணப்படுகிறது.

1. சர்வாங்க தகனபலி
2. சமாதான பலி

3. பாவ நிவாரண பலி
4. குற்ற நிவாரண பலி
5. போஜன பலி

போஜனபலியைத் தவிர மற்ற பலிகளில் மிருகம் அல்லது பறவைகளின் இரத்தம் முக்கிய இடத்தை பெறுகின்றது.

மிருகத்தையோ அல்லது பறவையையோ பலி செலுத்தும் போது கவனிக்கவேண்டிய சட்டதிட்டங்கள் இருக்கின்றன. சட்டதிட்டங்களின்படி செலுத்தப்படுகிற பொழுது தான். அந்த பலி ஏற்றுக்கொள்ளப்பட்டு பாவநிவர்த்தியை உண்டாக்குகிறது.

1. பலி மிருகத்தை பலிபீடத்தில் படைக்க வேண்டும்.
2. பலிக்கான மிருகத்தை கொண்டு வருகிறவா், அதின்மேல் தன் கையை வைக்க வேண்டும்.
3. ஆசாரியன் பலி மிருகத்தை கொல்ல வேண்டும்.
4. கொல்லப்பட்ட மிருகத்தின் இரத்தத்தை எடுத்து பலிபீடத்தின்மேல் ஆசாரியன் தெளிக்க வேண்டும்.
5. கொல்லப்பட்ட மிருகத்தை ஆசாரியன் பலிபீடத்தின் மேல் தகனிக்க வேண்டும்.

**சா்வாங்க தகனபலி (லேவி 1:5-17, 6:8)**

- ✓ பலியானது பலிபீடத்தில் முழுவதுமாக தகனிக்கப்படுகிறது. ஆகவே இந்த பலியின் பெயா் சா்வாங்க தகனபலி எனப்படுகிறது.
- ✓ பலி செலுத்துபவரின் வாழ்க்கை முழுவதுமாக தேவனிடம் கரங்களில் ஒப்புக்கொடுக்கப்படுவதற்கு அடையாளமாகவே இந்த பலி செலுத்தப்படுகிறது.
- ✓ அனுதினமும் காலையிலும் மாலையிலும் ஆசாரிப்பு கூடாரத்தில் ஆசாரியா்களால் இந்தபலி செலுத்தப்பட்டு வந்தது என்பதை நாம் அறிகிறோம்.

**சமாதான பலி (லேவி 3:1-17)**

- ✓ தன்னார்வமாக ஒருவா் முன்வந்து செலுத்துவதுதான் இந்த சமாதானபலி
- ✓ சிறப்புதன்மை - இந்த பலி பொருளை பலி செலுத்துகிறவா் தங்கள் குடும்பங்களோடு புசிப்பதற்கு தேவன் அனுமதி கொடுத்திருந்தார். சா்வாங்க தகனபலி இப்படிப்பட்டதல்ல.
- ✓ தேவனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள ஐக்கியமும், உயிருள்ள உறவும் மேன்மையடையும்படி இந்த சமாதானபலி செலுத்தப்படுகிறது.

சமாதான பலியில் 3 விதமான சமாதான பலிகள் காணப்படுகின்றன.

1. நன்றிபலி – எதிர்ப்பார்த்திருந்த நன்மையை பெற்றவர்கள், தாங்கள் பெற்ற நன்மைக்கு தேவனுக்கு நன்றிகூறும் வகையில் செலுத்தப்படும் பலி இதுவாகும்.
2. பொருத்தனை பலி: தாங்கள் நேர்ந்து கொண்ட பொருத்தனை நிறைவேற்றுகிற பொழுது, செலுத்தப்படும் பலி இதுவாகும்.
3. மனப்பூர்வமான பலி: நான் நம்புகிற, என்னை தெரிந்துகொண்ட தேவன் எவ்வளவு பெரியவர், அவர் மேல் நான் அன்பாக இருக்கிறேன். அவரோடு ஐக்கியப்பட, உறவுகொள்ள விரும்புகிறேன் என்பதை வெளிப்படுத்த செலுத்தப்படும் பலி இதுவாகும்.

**3.பாவ நிவாரன பலி** : தேவன் கட்டளையிட்ட பிரமானங்களை மீறினதினாலே செலுத்தப்பட வேண்டிய பலி இந்த பாவநிவாரண பலி. அறியாமல் செய்த பாவத்திற்கான மன்னிப்பை தேவனிடம் பெற்று, தண்டனைக்கு தப்பும்படி செலுத்தப்படும் பலி இதுவாகும்.

4. **குற்றநிவாரணபலி** : பாவ நிவாரண பலியை போன்றது தான் இந்த குற்றநிவாரண பலியும், ஒரே ஒரு வித்தியாசம் - அறியாமல் செய்த பாவத்திற்காக செலுத்தப்படுவது பாவநிவாரண பலி. ஆனால் பாவம் என்று அறிந்து துணிகரமாய் பாவம் செய்ததற்காக வருந்தி தண்டனைக்கு தப்ப, மன்னிப்பு பெற செலுத்தப்படுவது குற்றநிவாரணபலி.
5. **போஜனபலி** : இது தானிய பலி என்றும் அழைக்கப்படுகிறது. ஏனென்றால் பூமியின் விளைபொருளை ஆதாரமாக கொண்டு தேவனுக்கு பலி செலுத்தப்படுவதால், விளைச்சலின் முதற்பலனை தேவனுக்கு நன்றி செலுத்தும் வண்ணமாய் கொண்டு வந்து படைக்கின்ற பலியாக இது காணப்படுகிறது. மற்ற பலிகளை போன்று, இதில் மிருகம் பறவை இவைகளின் இரத்தம் என்பது கிடையாது.

கேள்விகள்

1. யாத்திராகம புத்தகத்தின் இரண்டாவது பிரதானமான தலைப்பின் கீழ் வருகிற நிகழ்வுகளின் பெயர்களையும் அந்த நிகழ்வுகளுக்குள்ளாக காணப்படுகிற பிரிவுகளின் பெயர்களையும் வரிசைப்படுத்திக் கூறுக?
2. தேவன் இஸ்ரவேலரோடு ஏற்படுத்தின உடன்படிக்கையின் மூன்று முக்கிய தன்மைகளைக் கூறுக?

3. பத்துகட்டளைகளின் தலைப்புகளையும் தேவன் இந்த கட்டளைகளை கொடுத்ததற்கான காரணங்களையும் குறிப்பிடுக?
4. ஆசாரிப்பு கூடாரத்தின் அமைப்புகளைப் பற்றியும் அவைகளைப் பற்றி இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளையும் விளக்கமாக கூறுக?
5. லேவியராகமம் புத்தகத்தின் இரண்டு பெரும்பிரிவுகள் மற்றும் இப்புத்தகத்தின் கருப்பொருள், திறவுகோல் வார்த்தை இவைகளைக் குறிப்பிடுக?
6. ஆசாரிய ஊழியத்தைப் பற்றியும் அதனுடைய முக்கியத்துவயங்களைப் பற்றியும் இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளை விளக்கமாக கூறுக?
7. பலிகளை செலுத்துவதற்கான சட்டதிட்டங்களையும், பலிகள் செலுத்தப்படுவதின் முக்கியத்துவங்களையும் விளக்கமாக கூறுக?